1981 பிப்ரவரி 28]

கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநர் பதவி.

*வினா எண் 320—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கால்நடை பராமரிப்புத் துறையில் அத்தொழில் வல்லு நரையே துறைத் தலைவராக நியமிக்க அரசு ஏதும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க் கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(3) தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. ப. பொன்னுரங்கம் : நான் நான்கு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறேன். இன்னும் ஒன்று கூட எடுத்துக்கொள்ளப்பெறவில்லை.

திரு. துரை முருகன் : தமிழ்நாடு பூராவும் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளதால், மக்கள் மத்தியில் பெரிய பரபரப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதைக் குறித்து ஒத்திவைப் புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முருகன் அவர்கள் இப்போதுதான் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை என்னிடத்தில் கொடுத்தார்கள். இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத்தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பெறுகிறது என்கிற அளவில் எதிர்க் கட்சியினர் மகிழ்ச்சி அடைய வேண்டும்,